விலை ரூபா 1-50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆவணி 11 ஜுஹரம் 1 இதழ் 181

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-8-1987

## திருமலை பதற்றம்:

## தென்இந்திய படைதளபதி நேரில்விஜயம்

[திருகோணமலை]

திருமலை மடத்தடியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ், சிங்களஇனத்தவர்களுக்கிடையில் நடைபெற்ற மோதலையடுத்து, நிலைமையை அவதானிப்பதற்காக தென் இந்திய படைகளின் தளபதியும், இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படையின் கமாண்டருமான லெப்டினன்ட் ஜென

(5ம் பக்கம் பார்க்க

## "மக்களை அணிதிரட்டுவோம்!"

[அலுவலக நிருபர்]

"ஆயுதப் போராட்டம் மூலம் வெற்றி பெற்ற நாம் அரசியல் போராட்டத்தில் வெற்றி பெறவில்லை ஆயுதப் போர் தயாரிப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோமே தவிர மக்களை அணிதிரட்டி அரசியல் மயப்படுத்தும் வேலையை நாம் செய்யவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கிறோம்''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவு பொறுப்பாளர் திலீபன் தெரி

[8ம் பக்கம் பார்க்க]

# 'இந்தியபடையின் பக்கசார்பு"

# 'புலிகள்' கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

"இந்திய அமைதி காக்கும் படையினர் முன்பாக 'ரெலோ' இயக்க உறுப்பினர்களினால் நாம் குறிவைக்கப் பட்டோம். இச்சம்பவத்தில் 'ரெலோ' உறுப்பினர் ஒருவர் இந்திய அமைதிகாக்கும் படையினரால் பிடிக்கப்பட்டு பின்னர் அவர் குறித்த அந்த ஆயுதத்துடனேயே விடுதலையானார். இச்செயல், இந்திய அமைதிகாக்கும் படையினர் ஒரு பக்கச் சார்பாகச் செயல்படுகிறார்கள் என்று சந்தேகம் கொள்ள வைக்கின்றது."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:-

"மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக்கடவைக்கும் வெள்ளாங்குளத்திற்குமிடையில் குறுந்தன்குளம என்னுமிடத்தில் 'ரெலோ' இயக்கத்தினர் ஆயுதங்களுடன் மக்களை மிரட்டித் துன்புறுத்துவதில்தொடர்ச்சியாக இறங்கிவருகின்றனர். இச்சமூகவிரோத செயல்பாடுகளை நாம் இந்திய அமைதி காக்கும் படையின் கவனத்திற்குக் கொண்டு வந்தபோதும் அவர்களால் எதுவித உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

"இதனையடுத்து எம்மை தற்பாதுகாத்து கொள்வதற்காக எமது ஆயுதங்களை வாங்கிய

(5ம் பக்கம் பார்க்க)

## ஈழவர் முன்னணி ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை-இந்திய உடன்பாட்டின் பின்னர் தமிழ்ப் பகுதிகள்ல் பரவலாக இடம் பெற்ற ஒப்பந்த மீறல்களை எதிர்த்து ஈழவர் முன்னணி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நாளை மறுதினம் தமிழ்ப் பிரதேசங்களில் நடாத்தவுள்ளது.

## விடுதலையான 200 பேர்

## திருமலையில் உண்ணுவிரதம்

[திருகோணமலை]

திருகோணமலைநகரில் பூஸாவிலிருந்து விடுதலையான இருநூறுபேர் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுவிக்கக்கோரி உண்ணுவிரம் மேற்கொண்டனர்.

இந்திய இராணுவம் தலையிட்டு, மிகுதிப்பேரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததன் பேரில் உண்ணுவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.

## வடக்கு கிழக்கு இரு இடைக்கால ஆலோசனைசபை

### ஜனதிபதி விரைவில் அறிவிப்பார்

[கொழும்பு]

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியான இரு இடைக்கால ஆலோசனை சபைகளையும், இச்சபைகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய பிரதம நிர்வாக அதிகாரியையும் ஜனதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன விரைவில் அறிவிப்பார் என கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இரு தனித்தனியான சபைகளிலும், தமிழர் விடுதலைக்

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ் – கொழும்பு ரயில் சேவை செப். 1 ல்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் - கொழும்புக்கான ரயில்சேவை அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த வாரம் தொடக்கம் அநேகமாக செப்டம்பர் முதலாம் திகதி இச்சேவை ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆயிரம் இளைஞர்கள் திடீர் தலைமறைவு

[கொழும்பு]

தென் பகுதியில் கடந்த 3 மாதங்களில் சுமார் ஆயிரம் இளைஞர்கள் வீடுகளிலிருந்து தலைமறைவாகியுள்ளதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

இவ்வாறு தலைமறைவாகியுள்ள இளைஞர்கள்குறிப்பிட்ட ஓர்அரசியல் கட்சியில் சேர்ந்து இயங்குவதாகவும் இவர்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு சிங்களபாடசாலைகளில் 500 சிங்கள ஆசிரியர்கள் விரைவில்நியமனம்பெறுவர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு சுமார் 500 சிங்கள ஆசிரியர்கள் விரைவில் நியமனம் பெறவுள்ளதாகவும், இவர்களில் 250 பேர் செப்டம்பர் முதலாம் திகதி முதல் கடமையிலீடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடமையிலீடுபடும்

(5ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற தாக்குதல் சம்பவம்:

## ஐவர்மீது தொடர்ந்து விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்ற கட்டிடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஐவர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருவதாக குற்றப் புலனாய்வுத்துறையினர் தெரிவித்தனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள ஐவரில் நால்வர் பாராளுமன்ற ஊழியரெனவும், ஒருவர் வெளியாரென்றும் குற்றப் புலனாய்வுத்துறை பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு பிராங் டி சில்வா கூறினர்.

இவ்விசாரணையில் ஸ்கொட்லாந்து புலனாய்வு அதிகாரிகள் இருவரும் தமக்கு நல்ல ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் அவர் சொன்னார்.

## ஊழியரையும் மனைவியையும் பொலிஸார் தேடுகின்றனர்

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவம் தொடர்பாக, பாராளுமன்ற ஊழியர் ஒருவர் மீதும், அவரது மனைவி மீதும் வலை விரிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் இருவ

(5ம் பக்கம் பார்க்ச)

## ஓமந்தை தடைமுகாமில்

## இலங்கை - இந்திய இராணுவம்இழுபறி

(ஓமந்தை)

ஓமந்தை இராணுவ முகாமில் நீண்ட நாட்களாகப் போடப்பட்டிருந்த தடைகளை இந்திய அமைதிப் படைகள் அகற்றுவதும் இலங்கை இராணுவம் மீண்டும் போடுவதுமாக இழுபறிநிலை தொடருகிறது.

ஓமந்தை சந்திக்கு அருகில்

(5ம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவத்தை வழிமறிப்புச் செய்தனர்

[புல்மோட்டை]

புல்மோட்டைக்கு நேற்றுப் பகல் இந்தியஇராணுவம் வந்த

(5ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

மீண்டும் எமது ஸ்தாபனம்

27-08-87 (இன்று) வியாழக்கிழமை முதல்

வியாபாரத்துக்காக திறக்கப்படுகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

க. கு. கந்தையாபிள்ளை அன் சன்

K·K·K·

வாடிக்கையாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் தமது தேவைகளை எம்முடன் தொடர்புகொண்டு நிறைவு செய்யலாமென்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்

க. கு. கந்தையாபிள்ளை அன் சன்

124, ஆஸபத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-0661)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் ½ பரப்பு வெறும் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 18, ரெம்பிள் வீதி, யாழ்ப் பாணம். சி0555

திருமண பட்டுப்புடவைகள் காஞ்சிபுரம், ½X½, சில்க் அன் சிபோன், கொட்டன், காஞ்சி புரம் போன்ற நவீன சேலை வகைகளை பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001.

சி-0130

உடுவில் மகளிர் கல்லூரிக் குப் பின்னால் ¼ மைல் தூரத் தில் ஆர்க் வீதியில் ஒரு பரப் புக் காணிகல்வீட்டுடன உடன் விற்பனைக்குண்டு. மற்றும் விப ரங்களுக்குத் தொடர்புகொள் ளவும். வ. இராஜகோபால், ஆர்க் வீதி, உடுவில், சுன்னா கம். [சி-0656]

சாதாரண Office Table Towel Rack மர TV Deck stand, Amplifier, Type writer, Radio, Yashaca 120, மற்றும் பல தளபாடங்கள்விற்பனைக்கு உண்டு. பத்மநாதன், பிறி மல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. [சி-0651]

## தவறிவிட்டன

A. கிருஷ்ணராவ் ஆகிய எனது இரண்டு பாட கொப்பி கள் திருநெல்வேலிக்கும்- நாயன்மார்கட்டுக்குமிடையே தவறி விட்டன. கண்டெடுத்த வர்கள் கல்வியங்காட்டு சந்தி யில் உள்ள பெற்றோல் நிலையத் தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(சி-0652)

## தேவை

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண் விற்பனை யாளர்களும், பொறுப்பான வேலைக்கு இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரும் தேவை. தொடர்பு: சீமாட்டி 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி 0629)

பாபு தேவி வீடியோ சென் ரரில் Cashier ஆகவேலை செய் வதற்கு G C. E. (O/L) படித்த பெண் தேவை 28-08-87 அன்று மாலை 3-30 மணிக்கு நேரில்வரவும். 50, பிறவுண் ரோட், யாழ்ப் பாணம். சி-0635

பிளேட் டின் மெஷின் மைண்டர்கள் தேவை. நேரில் வரவும். செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

(எ- 2113)

## குத்தகைக்கு

மிருசுவிலிலுள்ள கோழி பாமில் (Farm) 3000 கோழி களுக்குரிய கூடுகள் வீடு (பெரிய! குத்தகைக்கு உண்டு விபரங்களுக்கு நிக்கலின்பாம் மிருசுவில் அல்லது 27/1, குரு சோல்ற் ரோட், யாழ்ப்பாணம். [சி 0594]

## வகுப்புக்கள்


1987ல் A/L பரீட்சை எடுக் காதவர்களுக்கான ஒரு வருட மீட்டல் வகுப்புக்களும் 1988ம் ஆண்டுக்கான ஒரு வருட விசேட மீட்டல் வகுப்புக்க ளும் ஆரம்பம்:- 1987-8-28 (வெள்ளி) மு. ப. 7 மணி. பௌதிகம் - வர்ணம் (மு. ப 7 - 8] ஏனையவை எமது ஆசிரியர் குழுவால் கற்பிக்கப் படும். அத்துடன் ஆண்டு 10, 11, 12, 13 க்கான வகுப் புக்களும் ஆரம்பமாகும். Science Centre, Karaveddy [சி 0613)

## கல்வி

மானிப்பாய், கொக்குவில் சாவகச்சேரியில் கம்பியூட்டர் கல்வி. Computer Programming (Basic) பயிற்சி காலம் 2 மாதம், கட்டணம் 750/- மட்டும் ஆரம்பம்: சனி, ஞாயிறு 30-8-87, திங்கள் புதன் வெள்ளி 31-08-87 சான்றிதழ் (Diploma) வழங் கப்படும். Unikco Computer Center, யாழ். ரோட் (சுது மலைச்சந்தி), மானிப்பாய். கே. கே. எஸ் ரோட் [3ம் கட்டை) கொக்குவில் சுஷாந்தி கல்வி நிலையம். 23, டச்ரோட், சாவகச்சேரி. [சி 0603]

---

"CROMPTON GREAVES"



Single Phase

| | | |
|---|---|---|
| $\frac{1}{4}$ | HP | 1750/- |
| $\frac{1}{2}$ | HP | 2250/- |
| $\frac{3}{4}$ | HP | 2600/- |
| 1 | HP | 3250/- |
| 1.5 | HP | 4150/- |
| 2 | HP | 5650/- |

Three Phase

| | | |
|---|---|---|
| $\frac{3}{4}$ | HP | 2900/- |
| 1 | HP | 3250/- |
| 2 | HP | 3550/- |
| 3 | HP | 4600/- |
| 5.5 | HP | 5750/- |
| 7.5 | HP | 8400/- |
| 15 | HP | 14500/- |
| 20 | HP | 17500/- |
| 25 | HP | 22000/- |
| 30 | HP | 25200/- |

**STARTERS**




STAR LEDTA MANUEL

| | |
|---|---|
| 7.5 HP | 1850/- |
| 10 HP | 1950/- |
| 15 HP | 2100/- |
| 20 HP | 2450/- |

STAR LEDTA AUTOMATIC

| | |
|---|---|
| 25 & 30 HP | 5250/- |

DIRECT ON LINE

Single Phase

| | |
|---|---|
| $\frac{1}{4}$ to 2 HP | 920/- |

Three Phase

| | |
|---|---|
| 1 to 5 HP | 920/- |

SPARES FOR STARTERS CONTACTS

| | |
|---|---|
| 7.5. 10, 15 HP | 365/- |
| 20 HP | 420/- |
| 25, 30 HP | 690/- |

OVERLOAD RELAYS

| | |
|---|---|
| 1 & 5 HP | 510/- |
| 7.5, 10, 15 HP | 510/- |
| 20 HP | 810/- |
| 25, 30 HP | 810/- |

COILS

| | |
|---|---|
| 7.5, 10, 15 HP | 215/- |
| 25, 30, HP | 250/- |

DISCOUNT FOR TRADE AND QUANTITIES

**GEEKAY LIMITED**

33, Bankshall Street,
Colombo - 11.
Phone: 540475 & 22011
(A 2102)

---

## வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு
# ஆடுகள் கொள்வனவு

வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு அப்பகுதி யில் விநியோகம் செய்வதற்கு 50. ஒரு வருட வயதுள்ள னவும், 50 ஆறுமாதவயதுள்ளனவுமான ஜமுனுபாரி அல் லது சனுன இன ஆட்டுக்குட்டிகளைக் கொள்வனவு செய்ய எண்ணியுள்ளது.

மேற்குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த ஆரோக்கிய மான ஆடுகளை விற்பனைசெய்ய விரும்புவோர் விலைகள் முதலிய தகவல்களைக் குறிப்பிட்டுத் தபால்மூலம் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**Project Management Services Ltd,**

33, BROWN ROAD,
NEERAVIADY.
JAFFNA. [எ-2109]

---

**BECON,** 156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

### A/L 88 Day Class

கலை, வர்த்தகம்.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| கணக்கியல் | — | மரியதாஸ் |
| இந்துநாகரிகம் | — | அருள்நங்கை |
| தமிழ் | — | மீரா |

**ஆரம்பம்: 31-08-87**

திங்கள் காலை 7-00 மணி

(எ-2112)

---

கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில் PROCESSING & PRINTING நவீனமுறையில் செய்து தருபவர்கள்.

**கொழும்பு ஸ்ருடியோ**
**55, மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[5] ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் கலர்பிலிம் சுருள் இனாம். ஏ2084

---

# திருமண அழைப்பு

நிகழும் பிரபவ வருடம் ஆவணி மாதம் 14-ம் திகதி (30-08-87)ஞாயிற்றுக்கிழமை மணி காலை 9-30— 11-00 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| எமது சிரேட்ட புத்திரன் | எமது சிரேட்ட புத்திரி |
|---|---|
| **அருட்சந்திரன்** | **அருள்வதனி** |
| [உதவி விரிவுரையாளர் தாவரவியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்] | [உதவி விரிவுரையாளர் தாவரவியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்] |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் தங்கள் குடும்பசமேதரராகச் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. | திரு. |
| க. இராமச்சந்திரன் | இ. அருளானந்தம் |
| (ஆசிரியர் ஸ்ரீகணேச வித்தியாலயம்), | (மாகாண தபால் அத்தியட்சகர்), |
| திருமதி | திருமதி |
| அ. இராமச்சந்திரன் | த. அருளானந்தம் |
| (இளைப்பாறிய ஆசிரியை), | ஆசிரியை சென். பீற்றேஸ் பாடசாலை,) |
| சரசாலை தெற்கு, | நவாலி தெற்கு, |
| சாவகச்சேரி. | மானிப்பாய். |

[சி 0513]

---

ஓம்

## குருப்பட்டாபிஷேக லிங்கதாரண
# விஞ்ஞாபனம்





கும்பகோணம் வீரபத்திர ஸ்தாபனுசாரிய பெரியமடம் ஸ்ரீஜெகத்குரு சாரங்க தேசிகேந்திர நீலகண்ட சிவாசாரியார் திருவருள் உத்தரவின்படி நிகழும் பிரபவ வருடம் ஆவணி மாதம் பதினோராம் திகதி (27-8-87) வியாழக்கிழமை பகல் மணி 10-10 தொடக்கம் 11-23 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் முன்பே லிங்காயத தீட்சை பெற்று ஆசாரசீலரா வுள்ள பனிப்புலம் முத்துமாரியம்மன் தேவாலய பூச கர்களும் தர்மகர்த்தாக்களுமாகிய

**சிவஸ்ரீ க. க. சதாசிவையா அவர்களுக்கும்**
**சிவஸ்ரீ க. வே. பேரின்பநாதையா அவர்களுக்கும்**

குருப்பட்டாபிஷேகமும், இவர்கள் துணைவியர் இருவருக்கும் லிங்கதாரணமும் நிகழ பனிப்புலம் முத்துமாரியம்மன் திருவருள் பாலித்திருப்பதால் அத் தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், அடியார்கள், வட அளவை சாத்தாகலட்டி ஐயனார் ஆலயத்துக்கு வருகைதந்து வைபவத்தில் கலந்து சிறப்பித்து இவர் கள் ஆசீர்வாதம் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
வீரசைவ குருபரம்பரை
**சிவஸ்ரீ கைலாயக் குருக்கள்**
**(ஐயம்பிள்ளைக் குருக்கள்)**
குருமகா சந்நிதானம், கீரிமலை.
பனிப்புலம், பண்டத்தரிப்பு. (சி 0648)

# இருநாடுகள் மத்தியில் கருத்துவேறுபாடுகள் இருந்தாலும்
# இந்தியாவின் ஒருமைப்பாட்டை குலைக்க
# அமெரிக்கா முயல்வதில்லை

## புதுடில்லியில் அமெரிக்க தூதர் பேட்டி

(புதுடில்லி)

"இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் அமெரிக்கா இறங்கவில்லை. அமெரிக்கா இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவதாகக் கருதுபவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றுபவர்கள் ஆவர்".

இவ்வாறு இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் புதுடில்லியில் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் —

'அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையில் சில விடயங்களில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றனவாயினும் வேறுபாடுகள் நீக்கப்படும் போது அதுபற்றியாரும்கவனத்திற்கு எடுத்துக்கொள்வதில்லை. கருத்துவேறுபாடுகள் நிலவும்போது அதுபற்றிப் பெரிதுபடுத்துகின்றனர். இது ஒரு துரதிர்ஷ்டவசமான விடயமாகும்.

தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் பலம் குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவும் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணவே விரும்புகிறது. எனினும் இவ்விடயத்தில் சில சக்திகள் குழப்பநிலையை உருவாக்கி அமெரிக்காவுக்கு எதிரான ஓர் உணர்வை மக்களிடையே ஏற்படுத்திவருவகின்றன எனவும் கூறினர். [சி]

உலகச் செய்திகள்

## 'கொன்ரா' கிளர்ச்சியாளர் தலைவர் அதிபர் றீகன்?

மனகுவா, ஆக-26

நிக்கரகுவா சன்டினிஷ்ர அரசுக்கெதிராகப் போராடும் 'கொன்ரா' கிளர்ச்சியாளர்களின் தலைவர்போல் அமெரிக்க அதிபர் திரு றொனல்ட் றீகன் செயற்பட்டுவருவதாக நிக்கரகுவா அரசு தலைவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

'கொன்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு பணம், ஆயுத பலம் மற்றும் பல உதவிகளையும் றீகன் நிர்வாகம் அளித்துவருவதுடன், நிக்கரகுவா அரசுக்கு எதிராகவும் அடிக்கடி கிளர்ச்சியாளர்களைத் தூண்டிவருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நிக்கரகுவாவில் மக்கள் ஆட்சி சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும்வரை கொன்ரா' கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவு அளித்துவருமென்றும் அதிபர் றீகன் தெரிவித்துள்ளார். [சி]

## மார்க். கம்யூ கட்சி கோர்க்கை

சென்னை, ஆக-26

இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு நிரந்தர இறுதித் தீர்வு காணுமுகமாகக் கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்படிக்கை முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டும் என மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில பிரிவு இந்திய அரசிடம் கோரியுள்ளது.

திண்டுக்கலில் நேற்று நடைபெற்ற இக்கட்சியின் கூட்டத்தையடுத்து பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றிய கட்சித் தலைவர் நல்லசிவம் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## எம். எக்ஸ். ஏவுகணை தகுதியற்றது!

வாஷிங்டன, ஆக-26

அமெரிக்காவின் நெடுந்தூரம் பாயும் ஏவுகணைகளில் மிக முக்கியமானதும். வலுமிக்கதும், முன்னணியில் திகழ்வதுமாகக்கருதப்பட்ட 'எம் எக்ஸ் ஏவுகணை' நம்பத்தகுந்ததல்ல என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

அமெரிக்க ஆயுதக் களஞ்சியத்தில் இதனை அதிகளவில் சேர்க்க அதிபர் றீகன் பெருமுயற்சிகளை மேற்கொண்டார். எம். எக்ஸ். ஏவுகணையைக் கண்டு அஞ்சுபவர்கள் அமெரிக்காவுக்கு எதிராகப் போராயுதம் தூக்கவே அஞ்சுவார்கள்; தயங்குவார்கள் இந்தத் தயக்கமே சமாதானம் நீடிக்கத் துணை நிற்குமெனக் கூறி இவ்வேவுகணைமீது அதிபர் றீகன் அபார நம்பிக்கை வைத்திருந்தார்.

50-எம். எக்ஸ் ரக ஏவுகணைகளைத் தயாரிக்க உத்தரவிடப்பட்டு இதுவரை 22 தயாராகிவிட்டன இப்போது மேலும் 50 தயாரிக்கப்படவேண்டுமென்பது பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆவல். ஆனால் இவ்வேவுகணை தயாரிக்கப்படும் விதம், பரீட்சித்துப் பார்க்கப்பட்ட முறை, இவை அனைத்தையும் நுணுகி ஆராய்ந்த குழுவொன்று அதிபர் றீகன் கூறியதுபோல் இதில் அப்படியொன்றும் விசேஷமில்லையென்றும், தகுதியற்றதென்றும் கூறியுள்ளது.

சோதித்துப் பார்த்த ஐந்து ஏவுகணைகளில் மூன்று மட்டுமே பலனளித்தது; இலக்கைத் தாக்கியது. மற்றைய இரண்டும் புஸ்வாணமாகிப் படுத்துவிட்டதாகவும் கூறி, இதனைத்தொடர்ந்தும் தயாரிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், இதனை மூடிமறைத்த அமெரிக்க விமானப்படையையும் இக்குழு கண்டித்துள்ளது. [சி]

## இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 3ம் தவணை இன்று முதல் ஆரம்பமாகி தொடர்ந்து இருநேர வகுப்புகளாக நடைபெறும்

## மகோற்சவம்

யாழ்ப்பாணம்,

ஆனைக்கோட்டை ஸ்ரீவரத விநாயகர் ஆலய மகோற்சவம் இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 7ம் திகதி திங்கட்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெறும். திருவிழாக்கிரியைகள் யாவும் நவாலி சிவஸ்ரீ விசுவநாதக் குருக்களால் நிகழ்த்தப்படும்.

## இடமாற்றம் பெற்றுள்ள கிராமசேவை அலுவலர்கள்

யாழ்ப்பாணம்,

யாழ் மாவட்டத்தில் செப்டம்பர் முதலாம் திகதி முதல் இடமாற்றம் பெற்றுள்ள கிராமசேவை அலுவலகர்கள் விபரம் வருமாறு. இவர்களில் சிலர் விஷேட சேவை அலுவலர்களாக இருந்து நியமனம் பெற்றவர்களாகும். நேற்று இந்தப்பட்டியலின் முதல் பகுதி வெளியிடபபட்டது.

| பெயர் | தற்போதைய இடம் | புதிய இடம் |
|---|---|---|
| சி சச்சிதானந்தம் | வேலணை (கி) | வேலணை (தெ) |
| எஸ் சுந்தரலிங்கம் | வேலணை (மே) | வேலணை (மே) |
| சி சிவகுலதிலகசிங்கம் | வேலணை | வேலணை (வ) |
| கே மகலிங்கம் | வேலணை | வேலணை (கி) |
| கே. கணேசலிங்கம் | வேலணை | அல்லைப்பிட்டி |
| கே கணேசவேல் | அல்லைப்பிட்டி | மண்கும்பான் |
| என். சுந்தரராஜா | மண்டைதீவு | மண்டைதீவு |
| எஸ் எஸ் சந்திரசேகரம் | அனலைதீவு | அனலைதீவு |
| ஏ பி புண்ணியமூர்த்தி | எழுவைதீவு | நாரந்தனை (வட) |
| கே. குலசேகரம் | காரைநகர் (வட) | காரைநகர் (மே) |
| கே. தில்லைநாதன் | காரைநகர் (கி) | காரைநகர் (கி) |
| எஸ் கனகசபாபதி | ஊர்காவற்றுறை | காரைநகர் (வடக்கு) |
| கே சிவலிங்கம் | ஊர்காவற்றுறை | காரைநகர் (தெற்கு) |
| சி மனோகரன் | ஊர்காவற்றுறை | ஊர்காவற்றுறை |
| எஸ். ஜெயபாலசிங்கம் | கரம்பன் | கரம்பன் |
| கே. சகாதேவன் | ஊர்காவற்றுறை | கரம்பன் (கி) |
| ஆர். சந்திரசேகரம் | ஊர்காவற்றுறை | எழுவைதீவு |
| என். தயானந்தன் | நாரந்தனை | நாரந்தனை |
| என். மோகனராஜ் | ஊர்காவற்றுறை | சுருவில் |
| எம். எம் டொமினிக் | கொழும்புத்துறை | கொழும்புத்துறை |
| எஸ். அருள்ராஜ் | யாழ்நகர் | ஈச்சமோட்டை |
| என். கந்தையா | அத்தியடி வீதி | அத்தியடி |
| ஏ அலெக்ஸ் | முஸ்லிம் வீதி | சுண்டுக்குளி |
| ஆர். அந்தோனி | யாழ்நகர் | குருநகர் (மே) |
| பி சொர்ணலிங்கம் | குருநகர் | குருநகர் (கி) |
| ஏ எம். ஐயாத்துரை | யாழ்நகர் | யாழ்நகர் |
| வி கே. தளையசிங்கம் | வண் (தெ கி) | பெரியகடை |
| எம். ஆரோக்கியநாதன் | வண் (தெ மே) | கொட்டடி |
| எம் எஸ். சினேன் | யாழ்நகர் | முஸ்லிம் வீதி |

(தொடரும்)

## எம். சி சி. 200—வது ஆண்டுவிழா கிரிக்கெட் போட்டி மழையால் கைவிடப்பட்டது

லண்டன், ஆக-26

இங்கிலாந்து எம் சி. சி. கிரிக்கெட் அணியின் 200 வது ஆண்டு விழாவை முன்னிட்டு லண்டன் லோட்ஸ் மைதானத்தில் எம். சி. சி அணிக்கும் உலகத் தெரிவுக் குழுவுக்குமிடையில் நடைபெற்ற ஐந்து நாள் கிரிக்கெட் போட்டி மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய எம். சி சி. அணி முதல்இனிங்ஸில் 5 விக்கெட் இழப்பிற்கு 4'5 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கூச் 117 ஓட்டங்களையும் அணித் தலைவர் மைக்கெறறிங் 179 ஓட்டங்களையும் பெற்றனர் இவ்வணி இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட் இழப்பிற்கு 318 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறினிச் 123 ஓட்டங்களையும், கூச் 70 ஓட்டங்களையும் பெற்றனர்.

உலகத் தெரிவுக்குழு முதல் இனிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 421 ஓட்டங்களைப் பெற்றது கவாஸ்கர் 188 ஓட்டங்களையும் இம்ரான்கான் 82 ஓட்டங்களையும் பெற்றனர். ஒரு நாள் இருக்கையில் வெற்றி பெற 353 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் 2ம் இனிங்ஸில் ஆடத் தொடங்கிய இவ்வணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 13 ஓட்டங்களைப் பெற்றது. மிகுதி ஆட்டத்தை மழைகுழப்பியது.

இதில் ஆரம்ப ஆட்டக்காரர் சுனில் கவாஸ்கர் மல்கம் மார்ஷல் வீசிய பந்து வீச்சில் ஓட்டமெதுவும் பெறாமலே ஆட்டமிழந்தார். [சி]

## தகவல் கொடுத்தவர் சுட்டுக்கொலை

[வவனியா]

துப்பாக்கித் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்த நபரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்

சிலாபம் பொலிஸ் பிரிவில் பல்லமமடமகெலே என்ற கிராமத்தைச் சேர்ந்த அலோசியஸ் அப்புஹாமி (39-வயது) என்ற குடும்பஸ்தரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என அறிவிக்கப்பட்டது.

சிலாபம் பதில் மாஜிஸ்திரேட் அல்விஸ் பெர்னாண்டோ சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணையினை மேற்கொண்டார்.

சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 11 (27-8-87)
கிழமை: வியாழன்
நக்ஷத்திரம்: உத்தரம்

மேடம்: குறுக்குவழிகளை மனம்நாடும், தொழிலிலும் தொல்லைகள் தோன்றும், பிரயாணத்தைப் பின்போடவும்.

இடபம்: இறைவழிபாடு பேலிடும், இதயத்தில் அமைதி நிலவும், கல்வி மேன்பாடும் உண்டு.

மிதுனம்: உதவிக்கு நண்பர்களும் கைகொடுப்பர், எதிரிகளும்பணிவர், பூமிச்சேர்க்கையுண்டாம்

கடகம்: கடமையிலும் உயர்வு கிட்டும், நிதியில் சமநிலை தென்படும், குடும்ப சுகமுமுண்டாம்.

சிங்கம்: கவலைகள் தாக்கும், பிள்ளையின் உடல்நலம் பாதிக்கப்படும், அவசரப் போக்கைத் தவிர்க்கவும்.

கன்னி: வெளியிடத்துப் பயணம் வேதனை தரலாம், தன் தொழிலில் நஷ்டமேற்படும், குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும்.

துலாம்: சிந்தையில்தடுமாற்றம் ஏற்படும், தொழில் மந்தநிலை உண்டாகும், புதியமுதலீடுகளைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: திரவிய லாபத்திற்கு இடமுண்டு, மனைவாழ்வும் சிறக்கும், ஆசிரியர்களுக்கு பொன்னுள்.

தனுசு; ஆயுத பீடையுண்டு, அன்னியர் விடயத்தில் அவதானம் வேண்டும், பண விடயத்திலும் கவனம் செலுத்தவும்.

மகரம்: உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும், உத்தியோக நலனுமுண்டாம், தேனுன வாழ்வும் சேரும்.

(7ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

"சமயம் வரட்டும் பல நற்செயல்களை ஒரேயடியாகச் செய்துவிடலாம்'' என்று காத்திருப்பவன் எந்தச் சமயத்திலும் எதுவும் செய்யமாட்டான்.

—சாமுவேல் ஜோன்சன்.

## நமது நோக்கு

# அமைதிச்சூழலில் உருவாகும் சிக்கல்!

தமிழர் பிரதேசங்களின் சில பகுதிகளிலிருந்து அன்றாடம் வந்துகொண்டிருக்கின்ற செய்திகள் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி தருபவையாக இல்லை.

முற்றுப்புள்ளிக்கு இடமே இல்லாதவகையில் தொடர்ந்துகொண்டிருந்த உயிர்க்கொலைகளுக்கு ஓய்வு கிடைக்க வழிசெய்துள்ள இலங்கை - இந்திய அமைதி ஒப்பந்தம் அமைதிச் சூழ்நிலையில் உருவாகும் சிக்கல்களை எவ்வாறு தீர்த்துவைக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

குறிப்பாக இலங்கை இராணுவம் குறித்த சில பகுதிகளிலிருந்து முழுமையாக வாபஸ் பெறப்படாத நிலையில் அப்பகுதிகளில் அவசர அவசரமாகப் பிற மாவட்டத்தினர் அதிகாரிகளின் அனுசரணையுடன் கொண்டுவந்து குடியமர்த்தப்படுவதாகக் கூறப்படும் புகார் புறக்கணித்து விடக்கூடியதொன்றல்ல. இப்பிரதேசங்களின் பூர்வக் குடிகளாக அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறிய தமிழ் மக்களை ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளுமானால் அம்மக்களையே முதலில் தாம் இருந்த பிரதேசங்களில் முறையாகக் குடியமர்த்துவதில் கவனம் செலுத்தப்படவேண்டும். இல்லையெனில் இலங்கை அரசு - அல்லது அதன் அதிகாரிகள் இதில்கபடம்செய்ய முனைகிறார்கள் என்பதாகும்.

பதவிக்கு வந்த அரசுகள் தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி அப்பகுதிகளில் தமிழினத்தவர்களின் விகிதத்தைக்குறைக்க எடுத்துவந்த முயற்சிகள் இனப்பிரச்னைக்கு வித்திட்ட முக்கிய அம்சங்களில் ஒன்று என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. இந்நிலையில் மேலே நாம் குறிப்பிட்ட செய்திகளின் உண்மை நிலையினை அமைதி காக்கும் இந்திய அதிகாரிகள் ஆராய்ந்து அறிவதும், அவ்வாறு நடைபெறாது பார்த்துக்கொள்வதும் அவசியம். இல்லையெனில் நிலைமைகள் வேறு விதமான சிக்கல்களைக் கொண்டுவரும்.

இது இவ்வாறிருக்க, யாழ்ப்பாணத்தில் அரச கெடுபிடிகளால் அவதியுற்ற மக்களுக்கென இந்திய அரசு மனிதநேய அடிப்படையில் அனுப்பிவைத்த உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதில் தில்லுமுல்லுகள் இடம் பெற்றிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள் கவலை அளிப்பதாகும்.

இராணுவ நடவடிக்கைகளால் நேரடியாகப்பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி குடாநாட்டு மக்கள் அனைவருக்குமே இந்திய உணவுப்பொருள்கள் கிடைக்கும் என்றே முதலில் கூறப்பட்டது. அமைதிஒப்பந்தம் கைச்சாத்தான கையோடு உணவு விநியோகத்தின் விறுவிறுப்பு குறைந்து விட்டது. பல இடங்களில் முன் அறிவித்தவாறு பொருள்கள் விநியோகிக்கப்படவில்லை. யாழ் நகரில் கடந்த சில தினங்களாக விநியோகிக்கப்படும் பொருள்களில் சீனி, மண்ணெண்ணெய், தீப்பெட்டி முதலியவை இல்லை.

போரின்விளைவாக ஏற்பட்ட வருமானமின்மை, தொழில் பாதிப்பு, பொருள்தட்டுப்பாடு, இடம்பெயர்வு போன்ற இன்னோரன்ன காரணங்களால் பலவகையாலும் பாதிக்கப்பட்டுவிட்ட இம்மக்கள் இந்திய இலவச பொருள்களை மகிழ்ச்சியோடு பெற்றுவந்தார்கள்.

இந்திய கப்பல்கள் வருவது நிறுத்தப்பட்டதனால் இப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதா அன்றில் ஏற்கனவே வந்துசேர்ந்துள்ள பொருள்களில்தில்லுமுல்லு நடைபெற்றதா?

இது அதிகாரிகளின் கவனத்திற்குரியது.

குடாநாட்டிலும், கிழக் கிழங்கையிலும், மீண்டும் வழமையான சூழ்நிலை உருவாகிவருவதாகக் கூறப்பட்டபோதிலும், பாதிக்கப்பட்டவர்கள் எல்லோருமே உடனடியாக பழையநிலைக்குத் திரும்பிவிடமுடியாது. தொழில், வருமானம் முதலியவற்றை அவர்கள் தேடி அமைத்துக்கொள்வதற்கு முன் அத்தியாவசிய உணவுகள் தேவை.

வருமானம் இல்லாமல் உணவுகளை எங்ஙனம்வாங்க முடியும்? விவசாயிகளும் கூட இனிமேல்தானே உற்பத்திகளில் இறங்கமுடியும்!

எனவே குடாநாட்டில் இந்திய உணவுப்பொருள்கள் கிடைக்காத மக்களுக்கு அவை வழங்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவது அவசியம். அதேபோல் கிழக்கிலங்கையிலும் இந்திய உணவுப்பொருள்கள் கிடைப்பதற்கு இந்திய அதிகாரிகள் ஏற்பாடு செய்திடவேண்டும்

இந்திய உணவுக்கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட சூழ்நிலை இப்போது வெகுவாகமாறிவிட்டபோதிலும் வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களின் வயிற்றுப்பசி தீர்ந்துவிட்டதாகக் கொள்ளமுடியாது.

### வருடாந்த உற்சவம்

[சுண்டிக்குளி]

நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 29ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

11 தினங்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்வைபவத்தில் செப்டம்பர் 6ம் திகதி சப்பரத்திருவிழாவும், 7ம் திகதி ரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

---

உலக அரசியல் — அவதானி

# தென் ஆபிரிக்காவின் 'இனஒதுக்கலை' ஒரு வேடிக்கையெனக் கருதும் நாகரிக உலகம் தனது கடமையிற் தவறுகிறது! சுமார் 2 லட்சம் சுரங்கத்தொழிலாளிகள் வேலைக்குத் திரும்பவில்லை வேலைநிறுத்தம் பூரண வடிவம் எடுத்திருக்கிறது

தங்களுக்கேற்படும்பொருளாதார கஷ்டங்களைப் பொருட்படுத்தாது, 46 தங்கச் சுரங்கங்களில் தொழில்புரியும் கறுப்புத் தொழிலாளிகள்வேலைக்குப் போகவில்லை. 30 சத அதிகரிப்புச்சம்பளத்தில் வேண்டுமென்றும் வேலைத் தளங்களில் உயிர்ப்பாதுகாப்புஉத்தரவாதக்கோரிக்கையும் இதனைத் தூண்டியது.

கடந்த காலத்தில் இவ்வித குழப்பம் ஏற்பட்டபோது வெள்ளை முதலாளிகள் கையாண்டகொடுமைகளைக் கருத்தில் கொண்டு வேலைநிறுத்தம் செய்தோர் கம்பனி விடுதிகளிலிருந்து தொழிலாளிகளை வெளியேறும்படி சுரங்கத் தொழிலாளர் தேசிய சங்கம் கேட்டிருக்கிறது.

### தொழில்நிலைய அபாயங்கள்

சம்பள விடயத்துக்கு மேலானது சுரங்கங்களில் அதிகரிக்கும் உயிர்அபாயம். பாதுகாப்புபற்றி அதிக அக்கறை காட்டத்தேவையில்லையென்று வெள்ளைத் தொழிலாளிகள் தமது கறுப்புசகாக்களை வற்புறுதிவந்தனர். உலகில் தென் ஆபிரிக்காவிலேயே சுரங்கத் தொழிலாளர் மரணம் மிகக்கூடியதொகை. உலகின் தங்கச்சுரங்கத் தொழிலில் இதுகாறும் மரணமடைந்தவர் தொகை ஐந்துலட்சத்துப் பத்தாயிரம் என்றால் அதில் 90 சதம் கறுப்பரே பலியானவர்கள். வருடாவருடம் 600பேர் தங்கச் சுரங்கங்களில் உயிரிழக்கின்றனர்.

வெள்ளையரிலும் பார்க்க கறுப்பரே சுரங்கங்களில் மாண்டுபோகின்றனர். அதற்கு உண்மையான விசாரணை நடப்பதில்லை. முகாமையாளர், அது தனிப்பட்ட தவறுகளால் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களால் என்று தட்டிக்கழித்து விடுகின்றனர்.

இந்தஅநியாயத்தை எவ்வாறு ஜெனரல் போத்தாவின் கொடியஆட்சி தீர்த்துவைக்குமென்பதை சர்வதேச சமுதாயம் ஆவலுடன் அவதானிக்கிறது. இன்றுவரைக்கும் வேலைநிறுத்தம் செய்தவர்களுக்கு எவ்வித வன்செயல்களும் இதுகாறும் நடக்கவில்லை என்றபோதும் இனவெறிஆட்சி இதனைமுறியடிக்க எந்த அக்கிரமத்தையும்-கறுப்பர்வதியும் இடங்களில் குழந்தைகள் உட்பட-எவரையும் கொல்லத் தயங்காது.

அரசியல் திருத்தம் ஏற்படாதவகையில் வேலைநிறுத்தம் அந்த நோயின் ஒரு அறிகுறியே. இன்று பேசப்படும் 'கறுப்பர் ஆலோசனைச் சபை' கறுப்பரைத் திருப்தி செய்யும் என்று கனக்காண்கின்றனர் போத்தா ஆட்சியாளர். இவர்களுக்காதரவளிக்கும் வேற்று நாடுகள் பகிஷ்கரிப்பு கறுப்பருக்கே நட்டமென்றும், அதிகமாக போத்தாவுடன் மிண்டினால் அவர் தீவிரப்படுவாரென்றும் பாசாங்கு செய்கின்றனர். உண்மை எதுவானால் வெள்ளைப்பிரமுகர்கள் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றுபோத்தாவை நெருக்கு

(5ம் பக்கம் பார்க்க)

# வளைகுடா யுத்தம் சடுதியில் முடியும் சாடையில்லை!

வளைகுடாவில் ஒரு பெரிய யுத்தம் நிகழலாமென்றும், அதற்குரிய ஆயத்தங்களை அமெரிக்கா அவசரப்பட்டுச் செய்கிறதென்றும் ஒரு அச்சம் அமெரிக்காவில் அரும்புகின்றது. இதனை முளையில் கிள்ளிவிடுவதற்கே, எண்ணைக் கப்பல்களுக்கு நடந்த அழிவு, கடற்கண்ணி அபாயம்; அமெரிக்க கடற்படையின் ஏவுகணைத் தாக்குதல் அனைத்தும் அமெரிக்காவில் பெரிதுபடுத்தப்படவில்லை.

ஐ. நா. தொடங்கிய சமாதானத்திட்டம் ஈரானுக்குப் பிடிக்கவில்லை— அதனால் ஈராக் ஆத்திரப்பட்டு பெரும் விமானத்தாக்குதல் நடத்துகிறது. இதனைமேற்குவல்லரசுகள் கண்டிப்பதில்லை. ஈரானின் பிடிவாதத்தையே கண்டித்து வருகின்றன.

ஈரானை இவ்வாறு தாக்கினால் அது சமாதான மேசைக்கு வருமென்றதப்பெண்ணம் இலங்கைப் போரிலிருந்து தொற்றியநோயா? அப்படியால் அது குணமடையாது. ஈராக் மண்கவ்வ நேரிடும்.

ஈரான் ஐ. நா. திட்டத்தை ஆதரிக்காது பிடிவாதமாக இருப்பதால் அதனுடன் தொடர்பை பகிஷ்கரிக்க வேண்டுமென்று அமெரிக்க சபையில் ஒரு ஆலோசனை கொண்டுவரலாம்; ஆனால் ஏனைய நாடுகள் அதனை ஆதரிக்கமாட்டா; வளைகுடாவில் நடைபெறும் அமெரிக்கா கடற்படைத் திருவிழா உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று ரஷ்யா எச்சரித்திருக்கிறது வளைகுடாவைச் சுற்றி இவ்விருவல்லரசுகளின் போர்க்கப்பல்கள் வட்டமிடுகின்றன.

# மக்கத்தில் நடந்ததென்ன? உண்மை வரலாறும் புனைகதைகளும் போட்டி போடுகின்றன. எனினும் பாரதூரமான விளைவுகள் ஏற்படாது நிலைமை கட்டுப்படுத்தப்படுகிறது

சவுதி தலைமைத்துவமும், ஈரானின் மதபீடமும் உலகின் இஸ்லாமிய ஆட்சிக்கு உரித்துக்கோருகின்றன. ஆனால் தங்களுக்கிடையே உள்ள ஷியா-சின்னி சித்தாந்த வேறுபாடே இந்தப் போராட்டத்தின் காரணமென்பதை வெளிவிடவில்லை.

மக்காவில் ஈரான் பிரசாரகருக்கு சவுதி ஆட்சி இடமளித்தது மெய். ஆனால் அந்த ஆர்ப்பாட்டம் 25 000 பேருடன் பெரிய மசூதியை எட்டியதும், கோவில் என்ற காரணத்தைக் கைவிட்டு அபாயத்தைத் தடுக்க சவுதி யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பு அளிக்க துப்பாக்கி பிரயோகித்தது மெய். சுமார் 275 பேர் (ஈரானியர்) கொல்லப்பட்டனர். 230 சடலங்கள் ஈரானுக்கு அனுப்பப்பட்டன. உலகப் பொதுஜனத்தொடர்பு ஸ்தாபனங்கள் இந்தச் சம்பவத்தைக் கட்டுப்படுத்தி வெளியிட்டாலும் அந்த அந்த ஊரில் வெளியாகும் தப்பான, ஒருதலைப்பட்ட விளக்கங்கள் போட்டிக்கு தூபமிடுகின்றன. துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்கமுடியாது போய்விட்டதென்பதில்நியாயமுண்டு.

# முடிதுறந்த வம்சம் மீண்டும் முடி சூடும் கனவில் காலம் கழிக்கிறது—ஈரானில் ஷாவின் மகனும் பிலிப்பைன்ஸில் ஆட்சியிலிருந்து துரத்தப்பட்ட மார்க்கோஸும்

இன்றைய போர் ஈரானின் முதுகெலும்பைப் பலவீனப்படுத்தியபோதும், அதனைமுறியடிக்கமுடியவில்லை. சிலமாதங்களில் ஆகக்கூடியது இரண்டாண்டுகள் கொமெய்னியின் ஆட்சி பிசுபிசுத்துவிடுமென்று பல மேற்கு நாடுகள் மனப்பால் குடித்தன. ஏழு வருடங்கள் முடிவடைந்தும், ஆயத்தொலாவின் புரட்சியும், அவருடைய போகும் இளமை பெருகின்றன.

றீகன் கண்ட கனு அயத்தொலாவுக்குப் பின்வரும் மிதவாதிகளுடன் நட்புக்கொள்வதே, அதற்காக யுத்த தளபாடம், ஒழுங்கற்றமுறையில் விலைப்பட்டது. அந்தச் சூழ்ச்சி பலிக்கவில்லை. பூமராங் மாதிரி அவரையே திருப்பித் தாக்கியிருக்கிறது. இருப்பினும் முன்னைய ஷாவின் மகன் ஈரானின் 5000 ஆண்டு பரம்பரை ஆட்சியைக் கைப்பற்றக் காலம் வந்திருக்கிறதென்கிறார்.

பிலிப்பைன்சிலிருந்து வெளியேற்றப்பட்டமார்க்கோஸ், தான்சூறையாடிய பணத்துடன் தமதுஆட்சியைக் கைப்பற்ற தடுப்புக் காவலிலிருந்தே சதித்திட்டமிடுகிறார். ஆண்டகுடி ஆளவேண்டுமென்றபைத்தியம் அங்குமட்டுந்தான் உண்டா?

# “அடக்கம், அமைதி ஆகிய பண்புகளின் உறைவிடமாக கே. சி. ரி. விளங்கினார்”

**— கனகநாயகம்**

(யாழ்ப்பாணம்)

“அடக்கம், அமைதி ஆகிய பண்புகளின் உறைவிடமாக அமரர் கே. சி. தங்கராசா விளங்கினார், ஆயினும் அவர் தமது கடமைகளில் விழிப்பாகவும், கருத்தாகவும் இருந்தார்” என்று சட்டத்தரணி திரு. எஸ் ஆர். கனகநாயகம் தெரிவித்தார்.

‘ஈழநாடு’ ஸ்தாபகர் அமரர் கே. ஸி தங்கராசா அவர்கள் நினைவாக வெளியிடப்பட்ட ‘அமரதீபம்’ நினைவஞ்சலி மலர் வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றிய போதே திரு. கனகநாயகம் மேற் கண்டவாறு தெரிவித்தார்,

‘ஈழநாடு’ அலுவலகத்தில் நேற்றுக்காலை இவ்வைபவம் இடம்பெற்றது

திரு கனகநாயகம் தொடர்ந்து கூறியதாவது:

‘தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும்’ என்ற குறள்மொழிக்கமைய திரு தங்கராசா அவர்கள் செய்துவிட்டுச் சென்ற சேவைமூலம் அவரை நன்கு அறியமுடியும்’

‘இலக்கண சுவாமிகள் என்னும் முத்துக்குமாரசுவாமி தம்பிரானின் மருமகனான அமரர் தங்கராசா, சுவாமிகளின் வழிகாட்டலின்படியே செயல்பட்டார், யோக சுவாமிகளின் பக்தனுகவும் இருந்ததோடு, அவரது ஆசீர்வாதத்துடன் ‘ஈழநாடு’ பத்திரிகையையும் ஆரம்பித்து அதன் சீரான பிரசுரத்துக்கு வழிவகுத்தார்’ என்றார்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய திரு பி எஸ் ஐயர் தெரிவித்ததாவது:

‘வண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் நிர்வாகத்தில் அமரர் தங்கராசா பெரும் பங்குவகித்தார், இந்த ஆலயத்தில் ‘திருச்செந்தூர்’ முருகனின் வடிவத்தில் பெறுமதிமிக்க முருகன் விக்கிரகத்தை ஸ்தாபித்து இக்கோயிலின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார்’ என்றார்

‘ஈழநாடு’ வாரமலர் ஆசிரியர் புலவர் பார்வதி நாதசிவமும் இவ்வைபவத்தில் உரையாற்றினார். தொடர்ந்து பதிலாசிரியர் திரு எஸ் பெருமாள் நன்றியுரை கூறினார்.

‘அமரதீபம்’ நினைவஞ்சலி மலரின் முதல் பிரதியை சட்டத்தரணி எஸ். ஆர் கனகநாயகம், தொழிலதிபர் எஸ் ரி தியாகராஜாவிடம் வழங்கினார்.

## வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கான விசேட அலவன்சும் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பகுதியில் பாடசாலைகளில் சுமார் 900 சிங்கள ஆசிரியர் பதவி வெற்றிடமுள்ளதாம். இதில் யாழ் மாவட்டத்தில் 490ம், அம்பாறை மாவட்டத்தில் 128ம், மட்டக்களப்பு மாவட்டத்தில் 187ம், மன்னார் மாவட்டத்தில் 84ம், வவனியா மாவட்டத்தில் 79ம், முல்லைத்தீவு மாவட்டத்தில் 62ம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது, பொதுமக்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து வழிமறிப்புச் செய்தனர்.

இதனையடுத்து இராணுவம் முன்னேறமுடியாது திரும்பிச் சென்றது.

“சிங்கள ஊர்காவற்படையிடம் இருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்யவேண்டும். சிங்கள குடியேற்றங்கள் தடுக்கப்படவேண்டும். இராணுவ முகாம்களை மூடவேண்டும்” போன்ற கோரிக்கைகளைப் பொதுமக்கள் வலியுறுத்தினர்.

## ஓமந்தை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

உள்ள இராணுவ முகாமில் போடப்பட்டுள்ள தடைகளை இந்திய அமைதிகாக்கும் படையினர் அகற்றிவிட்டுச் செல்ல சிலமணிநேரத்தில் சிறிலங்கா இராணுவம் வந்து மீண்டும் போடுகிறது.

நேற்றுமுன்தினமும் நேற்றும் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இத்தடையினால் சகலவாகனங்களும் சற்றுதூரம் காட்டுப்பாதை ஊடாக செல்ல வேண்டியுள்ளது.

(பலாலி நிரு)

## தென் ஆபிரிக்காவின்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

மூன்றும் உலக நாடுகள் இந்தியாவின் தலைமையில் அணிதிரண்டு கறுப்பினத்துக்கு விடிவு காண உலகுக்கு அழைப்பு விடுகின்றன. குபேர நாடுகள் தென் ஆபிரிக்காவின் தங்கம் தடைப்படுமோ என்ற அச்சத்தால் மனித இனத்துக்கு காலாகாலமாக உண்டான அநீதியையும் அடிமைத் தனத்தையும் கருத்திற் கொள்வதாகத் தெரியவில்லை.

## ஊழியரையும்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரும் தலைமறைவாகியுள்ளதாகவும், உள்ளூர் பொலிஸாரினால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமலிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற ஊழியர், பாதுகாப்பு ஊழியர் உட்பட இதுவரை 700 பேரின் வாக்குமூலங்களைப் பொலிஸார் பதிவு செய்துள்ளனர். [க]

## இடைக்கால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி, விடுதலைப் புலிகள், ஈரோஸ், மற்றும் போராளிகள் குழுக்களின் பிரதிநிதிகளும். தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இடம்பெறுவார்கள்.

இவ்விரு சபைகளுக்குமான தங்கள் பிரதிநிதிகளின் பெயர்களை ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணியும், விடுதலைப் புலிகளும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளனர். ஈரோஸ் இந்த வாரம் தங்கள் பிரதிநிதிகளின் பெயர்களை அனுப்பிவைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது

ஆரம்பத்தில் அரசு வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு ஒரே ஒரு இடைக்கால ஆலோசனை சபையையும். ஒரு பிரதம நிர்வாக அதிகாரியையும் நியமிக்க உத்தேசித்திருந்தது.

## இந்திய படையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அமைதிகாக்கும் படையின் துணையுடன் நாம் குறுந்தன்குளம் வழியாக வந்துகொண்டிருக்கையில் எம்மை ‘ரெலோ’ இயக்கத்தினர் ஆயுதங்களுடன் எதிர்கொண்டனர்.

“இந்திய அமைதிகாக்கும் படையினர் ‘ரெலோ’வின் ஆயுதங்களை வாங்க முற்பட்ட போது இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராகவே ரெலோ இயக்கத்தினர் ஆயுதங்களை நீட்டினார்கள். இது மட்டுமன்றி இந்திய அமைதிகாக்கும்படை முன்பாகவே நாம் குறிவைக்கப்பட்டோம்.

இதில் சம்பந்தப்பட்ட ரெலோ இயக்க உறுப்பினர் தமது ஆயுதம் ஒன்றுடன் இந்திய அமைதிகாக்கும் படையினரிடம் பிடிபட்டார். ஆனால் அவர் பின்னர் தனது ஆயுதத்துடனேயே இந்திய அமைதிகாக்கும் படையினரால் விடுவிக்கப்பட்டார். இவரிடமிருந்து ஒருமகசீனும் ஒரு ‘வாக்கிடோக்கி’யும் இந்திய அமைதிகாக்கும் படையினரால் வாங்கப்பட்ட போதும் ஜி-3 தானியங்கித் துப்பாக்கி மீண்டும் ஒப்படைக்கப்பட்டு அக்குறித்த ‘ரெலோ’ இயக்க உறுப்பினர் விடுவிக்கப்பட்டார்.

“இந்திய அமைதி காக்கும் படையினரின் இந்நடவடிக்கை எம்மைச் சந்தேகம் கொள்ள வைக்கின்றது. ஏற்கனவே நாம் எமது ஆயுதங்களை கையளித்து எமது மக்களின் பாதுகாப்பை இந்தியாவிடம் ஒப்படைத்திருந்தோம். ஆனால் இந்திய அமைதிகாக்கும் படையின் இந்தபக்கசார்பானசெயற்பாடு எம்மைச் சந்தேகம் கொள்ள வைக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.” (எ)

# “பிரிட்டனில் தஞ்சம் கோரிய——— இலங்கைதமிழருக்கெதிரான உத்தரவு கேலிக்கிடமானது”

லண்டன், ஆக. 26

“பிரிட்டனில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டுஇலங்கைசகு நாடு நடத்துமாறு ஐந்துஇலங்கைத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டஉத்தரவுகேலிக்கிடமானது.

இனநெருக்கடியினால் சீரழிந்த இலங்கைக்கு வெளிநாடுகளில் தஞ்சம் கோரிய தமிழர்கள் தற்போது பாதுகாப்பாகத் திரும்பிச்செல்லலாமெனக் கூறிவிடமுடியாது சிறிதுநாட்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இவ்வாறு பிரிட்டிஷ் குடிவரவு ஆலோசனை சேவையைச் சேர்ந்த திரு. ஸ்ரோய்ல் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிலுள்ள பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் திரு. டக்ளஸ் ஹேட், அரசியல் அடைக்கலம் வழங்கத் தகுதியில்லாதவர்கள் என்று கருதப்படும் ஐந்துபேரை ‘ஹார்விச்’ துறைமுகத்தில் உள்ளகப்பலில்வைக்கப்பட்டுள்ள இலங்கைத்தமிழ் அகதிகள் 46 பேரையும் உடனடியாக நாடு கடத்துமாறு வலதுசாரிஎம்.பிக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து உடனடியாக நாடு கடத்துமாறு உத்தரவிட்டிருந்தார்

இந்த உத்தரவே கேலிக்கிடமானது என்று திரு ஸ்ரோய்ல் தெரிவித்தார்.

திரு ஹேட்டின் இந்த முடிவைத் தொடர்ந்து ஏனைய ஐரோப்பியநாடுகளும் இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் பட்சத்தில் இலங்கையில் தற்போது ஏற்பட்டுவரும் அமைதிநிலை பாதிப்படையக் கூடுமென்றும் திரு. ஸ்ரோய்ல் தெரிவித்தார்.

இதேவேளையில் மேற் குறிப்பிட்ட கப்பலில் அகதிகளாகத்

(8ம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் இளைஞ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் பொலிஸ் இராணுவ கூட்டுப் படை வெள்ளவாய காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்திய போது பெருமளவில் ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் இளைஞர்களின் மறைவிடங்கள் பலவும் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரல் திபேந்திர சிங் நேற்று காலை 10 00 மணிக்கு சென்னையிலிருந்து திருமலைக்கு விஜயம் செய்தார்.

திருமலை வந்த அவர்குறித்த மோதலில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவரையும் சென்று பார்த்ததுடன், திருமலை மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா, அரசாங்க அதிபர் டி எம். ஆரியரத்த. பிரஜைகள் குழு ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப் பேச்சுவார்த்தையின் போது திருமலையில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அவர் உறுதியளித்துள்ளார்.

லெட்டினட் ஜெனரல் திபேந்தர்சிங்குடன் வடபகுதி இந்திய அமைதிப்படையின் தளபதி மேஜர் ஜெனரல் ஹர்கீத்சிங்கும் திருமலை சென்றிருந்தனர். [கே]


31-ம் நாள் நினைவஞ்சலி



கா. கந்தையா சிமியோன்

பிறப்பு: 13-11-1913

இறப்பு: 28-07-1987

நீர்வை உன் பிறப்பிடம், நீ நேர்மையின் உறைவிடம், உண்மையே பேசினாய், நன்மையே செய்தாய், வேதனையை அடைந்தாய், சாதனையை சமைத்தாய், மறைபோதனைப்படி நடந்தாய், இறை சோதனையை வென்றாய். அன்னாரின் ஆத்மசாந்திக்காக 27-08-87 காலை 6-15 மணிக்குப் பரி. கொஞ்சேஞ்சிமாதா பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.

04, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

(சி 0660)

கடைசி நேர வரிவிளம்பரம்

தேவை

எழுதுவினைஞர் தேவை. சொந்தக்கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். செட்டியார் அச்சகம், 428, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 2116)

மீண்டும் “ஹோட்டல் றெலெக்ஸ்”

உங்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்ற

★ ஹோட்டல் றெலெக்ஸ் ★

இன்று (27-08-87) தொடக்கம்

மீண்டும் தனது சேவையைத் தொடங்குகின்றது

★ தேன்சிந்தும் ஐஸ்கிறீம் வகைகள்
★ மட்டன் றோல் ★ பற்றிக்ஸ்
★ பொம்பே சுவீற்ஸ்
★ மற்றும் குளிர்பான வகைகளுக்கும்
★ சுவைமிகுந்த கோழிப் புரியாணிக்கும்

ஹோட்டல் றெலெக்ஸ்

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

[சி-065]

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

1. கார்த்திக் ★ S.V. சேகர் ★ இளவரசி “எங்க வீட்டு இராமாயணம்”
2. சிவாஜி ★ சௌகார்ஜானகி ★ சந்திரபாபு “நீதி” “A” பிரதி
3. A.V.M. ராஜன் ★ சாரதா ★ நாகேஷ் “துலாபாரம்” “A” பிரதி
4. “காதல் சங்கமம்” “A” பிரதி (ஒளியும் ஒலியும் புதிய பாடல்கள்)

குணம் வீடியோ சென்ரர்,

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 23665

(ஏ-2118)

## பாராளுமன்றத் தாக்குதல் சம்பவம்:
# கொலையாளி துப்பாக்கியை பயன்படுத்தவில்லை? பொலிஸார் ஊர்ஜிதம்

[கொழும்பு]
பாராளுமன்றத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் துப்பாக்கி பயன்படுத்தபடவில்லையென்று பொலிஸார் தற்போது ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர் இரு கைக்குண்டுகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

கடந்தவார சம்பவத்தின் போது படுகாயமடைந்து நேற்றுமுன்தினம் மரணமான எழுதுவினைஞர் திரு சேனதீரவின் பிரேதபரிசோதனை இருமுறை நடாத்தப்பட்டதையடுத்தே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாம். இவரின் உடலில் வெடிக்கும் உபகரணமொன்றிலிருந்து சிதறிய கூரானபொருள்களின் காரணமாகவே இவர். உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் இவ்வாறு தெரிவித்துள்ள போதிலும் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் சம்பவம் நடைபெற்றதையடுத்து ஜனாதிபதி தெரிவித்தபோது தம்மை நோக்கி முதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் பின்னரே கைக்குண்டு வீசப்பட்டதாகவும் கூறிவிருந்தார். இதனையே பல அமைச்சர்களும் ஊர்ஜிதப்படுத்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான துப்பாக்கிச் சூட்டின் போதே திரு. சேனதீர அதனை ஏற்று படுகாயமடைந்ததாகவும் பாராளுமன்றத்தில் சம்பவத்தை பார்த்த உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். எனினும் சம்பவம் நடைபெற்ற இடத்திலும் மரணமடைந்த எழுதுவினைஞரின் பிரேத பரிசோதனையிலுமிருந்து மேற்படி முடிவை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (சி)

# 260 இளைஞர்களில் 16 பேர் மட்டுமே விடுதலை

## வவனியா பிரஜைகள்குழு தகவல்

[வவனியா]
இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தத்தினையடுத்து வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த 16 இளைஞர்கள் மட்டுமே தடுப்புக்காவலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை வவனியா மாவட்ட பிரஜைகள்குழு செயலாளர் டாக்டர் எஸ் வி. பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

காலி பூஸா தடுப்பு முகாமில் தற்போது வவனியாவைச் சேர்ந்த 260 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சமயபரீட்சையில் சித்திபெற்றோர்

[யாழ்ப்பாணம்]
தெல்லிப்பளைபாலர் ஞானோதய சபை, சுந்தரமூர்த்தி நாயனாரின் குரு பூசையை முன்னிட்டு நடத்திய சமயப்பாடப் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்.

மத்தியபிரிவு: க உதயதர்ஷினி. க ஜெசிந்தா, ஆ. கலஜினி, க. மஞ்சுளா, நா தலாதரன். வி அபிராமி, இ இரமணகிருஷ்ண.

கீழ்ப்பிரிவு: வி. நிதீபன், வா. சயந்தன், வி. அமிர்தினி, நா. கலாவதி, க. துஷ்யந்தி, நா. நளினு (ஒ)

## அரசு வாகனங்கள் முகாம்களிலிருந்து மீட்பு

(ஒட்டுசுட்டான்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கத்துக்குச் சொந்தமான வாகனங்கள் ராணுவ முகாம்களிலிருந்து மீளப் பெறப்பட்டு வருகின்றன

இதன் முதற்கட்டமாக நேற்று நீர்ப்பாசன இலாகாவுக்குச் சொந்தமான ஜீப் வண்டியை ஒட்டுசுட்டான் முகாமிலிருந்து பொறியியலாளர் பெற்றுக்கொண்டார். ஆனாலும் இந்த வாகனங்கள் உடனடியாக சேவையாற்றக் கூடிய நிலைமையில் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது

# விடுதலையான இளைஞர்கள் கடுமையாகப் பாதிப்பு!

(பலாலி)
பூஸாமுகாமில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளவடமராட்சிப்பகுதி இளைஞர்கள் பலர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்

வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு அண்மையில் விடுதலையானவர்களில் 25 பேர் பலநோய்களால்பீடிக்கப்பட்டுள்ளதுடன் சிலர் நடக்க முடியாத நிலையிலும் கை, கால் வழங்காத நிலையிலும் தெல்லிப்பழை அரசினர்வைத்தியசாலை, மந்திகை அரசினர் வைத்தியசாலை, யாழ் போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சைபெற்று வருகின்றனர் சிகிச்சைபெறும் இளைஞர்களை செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்வையிட்டுச்சென்றனர்.

## வெளிநாட்டில் சிகிச்சைபெற லலித் மறுப்பு

[கொழும்பு]
"வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பணியாற்றியபோது பாதுகாப்புப் படையினரில் பலருக்கு எனக்கு ஏற்பட்டுள்ளதைப்போன்ற பாரதூரமான காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வீரர்களையெல்லாம் எமது நாட்டு டாக்டர்களே சிகிச்சையளித்துக் காப்பாற்றியுள்ளார்கள் எனவே எனது காயத்தையும் அவர்கள் தரும் சிகிச்சை குணமாக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு ஆதலால் வெளிநாட்டுச் சிகிச்சை எதுவும் எனக்குத் தேவையில்லை" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்

திரு. லலித் அத்துலத்முதலியிடம், வெளிநாட்டுக்கு மருத்துவ சோதனைக்காக அவரைக் கொண்டுசெல்வது பற்றிக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் அமைச்சர் லலித் சிகிச்சை பெற்று வருகிறார்.

உறவினர்கள் உட்பட வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள நண்பர்களும் லலிததை விரிவான மருத்துவ சிகிச்சைக்காக உலகின் எப்பகுதிக்கும் கொண்டுசெல்ல முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந் சிகிச்சைக்கு வரும்படி லலித்துக்கு அழைப்புக்கள் கிடைத்துள்ளன. உறவினர்கள் சிலர் அவரைத் தம்முடன்கூட்டிச்சென்று சிகிச்சை அளிப்பதற்கென்றே கொழும்பு வந்துள்ளனர். ஆனல் அவர் இவர்களின் அழைப்புக்கள், வேண்டுகோள்களை மறுத்துள்ளதுடன், உலகின் எப்பகுதியிலும் கிடைக்கக்கூடிய சிகிச்சைக்கு நிகரான சிகிச்சையை தம்மைக் கவனிக்கும் இலங்கை டாக்டர்களிடமிருந்து தாம் பெற்றுவருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## ":சிலம்பு விளக்கு" அறிமுகம்

[யாழ்ப்பாணம்]
அண்மையில் சண்டிலிப்பாய் அங்கணுக்கடவை அருள்மிகு அம்மன் தலத்தில் தொல்பொருள் ஆய்வாளர் ம பொ. செல்வரத்தினம் இயற்றிய "சிலம்பு விளக்கு" என்னும் நூல் வெளியிடப்பட்டது இதனை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அறிமுகம்செய்துவைத்தார். உதவி அரசாங்க அதிபர் சாந்தி சுப்பிரமணியம் ஆய்வுரை வழங்கினார். சிவநெறிக் காவலர் க. கனகராசா முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

## 'வாசகர் ஒன்றியம்'

[யாழ்ப்பாணம்]
யாழ். அரசாங்க அதிபர் செயலகத்தில் 'வாசகர்கள் ஒன்றியம்' உருவாக்கப்பட்டது.

தலைவராக திரு. வி. எஸ். கனகரட்ணமும், செயலாளராக திரு. பெனடிற் அலோஷியஸும், பெருளாளராக திரு இ. அ. யேசுநேசனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

கடந்த பல வருடங்களாக அரச அடாவடித்தனத்தால் எமது நூலகங்கள் பல அழிக்கப்பட்டன, இதனல் நூல் வாசிக்கும் பழக்கம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நூல் வாசிப்பதை மீளப் புத்துணர்ச்சி கொடுத்து சகலருக்கும் வாசிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே ஒன்றியத்தின் தலையாய நோக்கம் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## மீன் விலை குறைந்தது

[பலாலி]
மீன் விலை பல மடங்கால் குறைந்துள்ளது.

சுன்னுகம், தெல்லிப்பழை, காங்கேசன்துறை சந்தைகளில் பெரும் அளவு மீன்கள் விற்பனைக்காகக் காணப்படுவதுடன், விலையும் மிகக்குறைவாக காணப்படுகின்றது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ஜோர்ஜ் ஸ்டுவேர்ட்ஸ் & கம்பனி லிமிட்டெட்டுக்கு

விநியோக ஏஜென்டுகள் தேவை

தனித்துவ விநியோகஸ்தர்கள்—எம் டி. ஜாம், கோர்டியல்ஸ், சோசஸ், ரின்களில் அடைக்கப்பட்ட பழவகைகள், "ஸ்டுவேர்ட்ஸ்" தங்கத்தேயிலை, "ஸ்டுவேர்ட்ஸ்" பொலி தேயிலை, ஸ்டுவேர்ட்ஸ் தேயிலைத்தூள். "குக்ஸ்" விணுக்கிரி, "சில்வர் சி" தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள், "யூனிரெக்ஸ்" குமிழ்முனைப் பேனைகள், "பார்மக்கோ" குளுக்கோஸ், "மல்றிபொன்ட" வீட்டுப்பாவனை ஒட்டுப்பசை, "எஸ். 26" குழந்தைகள் பால்மா, மற்றும் அதைவிட "எஸ். எம். ஏ." (S. M. A.) குழந்தைகள் பால்மாவுக்கு விநியோகஸ்தர்கள்.

மேற்படி பொருள்களுக்கு பின்வரும் மாவட்டங்களில் விநியோக ஏஜென்டுகள் தேவை.

மன்னர், கிளிநொச்சி, யாழ்ப்பாணம்,
தெல்லிப்பழை, முல்லைத்தீவு, வாழைச்சேனை,
மட்டக்களப்பு.

தயவுசெய்து வியாபார விபரங்களுடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளவும்.

முகவரி:- சந்தைப்படுத்தும் இயக்குநர்,
ஜோர்ஜ் ஸ்டுவேர்ட்ஸ் & கம்பனி லிமிட்டெட்,
45, ஜனதிபதி மாவத்தை,
கொழும்பு–1.

[ஏ 2069]

## கொத்தணி அமைப்பு

[அச்சுவேலி]
அச்சுவேலிக்கொத்தணிப் பாடசாலை அமைப்பு அச்சுவேலி மகாவித்தியாலயத்தை தலைமைப்பாடசாலையாகக் கொண்டு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படுகின்றது. இதற்கான அனுமதியைகல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

அச்சுவேலிக்கொத்தணி அமைப்பின்கீழ் பத்துப்பாடசாலைகள் செயற்படவுள்ளன அச்சுவேலி மகாவித்தியாலயம் (தலைமைப் பாடசாலை] இடைக்காடு மகாவித்தியாலயம், கதிரிப்பாய் பாலசுப்பிரமணிய வித்தியாலயம், வளலாய் அமெரிக்கன் மிசன் பாடசாலை, பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம் பத்தைமேனி வியசிபௌத்த பாடசாலை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் அச்சுவேலி றோமன் கத்தோலிக்க பாடசாலை அச்சுவேலி புனிததிரேசா மகளிர் வித்தியாலயம் தோப்பு அருள் நந்தி வித்தியாசாலை.

இக்கொத்தணி அமைப்பு அதிபராக திரு. வே சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இந்திய படையினர் ஒப்படைத்தனர்

(யாழ்ப்பாணம்)
இலங்கை இராணுவத்தால் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கருதப்படும் வடமராட்சி மக்களின் சில பொருள்கள் தொண்டமானுறு இராணுவ முகாமிலிருந்து அமைதி காக்கும் இந்தியப படையினரால் மீட்கப்பட்டு மந்திகையில் வைத்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இப்பொருள்களில்சைக்கிள், ரிவி, டெக் மற்றும் கவர்ச்சிகரமான வீட்டு உபகரணப் பொருள்கள் காணப்பட்டன. இவைகள் யாவும் வடமராட்சியில் இடம்பெற்ற 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கையின்போது காணமல் போயிருந்தன.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது அநேகமான மக்கள் தமது பொருள்களை இழந்திருந்தனர். ஆனல் இந்தியப் படையினரால் தற்போது மிகவும் சிறிய தொகையான பொருள்களே மீட்கப்பட்டுள்ளன.

## இன்றையபலன்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கும்பம்; சிலருக்கு நூதன ரோகம் தென்படும், திருடர் பயத்திற்கு இடமுண்டாம், தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும்.

மீனம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும்,எதிர்பாராதவரவுக்கும் இடமுண்டு, கடமையிலும் புதிய உத்வேகம் பிறக்கும்.

திருமலை
வே. இரவீந்திரன்

## இராசவரோதயம் நினைவு தினம் இன்றாகும்

திருகோணமலை தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முக்கிய மடைந்திருக்கிறது. திருமலையின் இயற்கைத்துறைமுகமும், கேந்திர ஸ்தானமும் தென்கிழக்காசியாவில் பிரபல்யமடைந்திருக்கிறது இதே வேளை இலங்கையின் வடகீழ் மாகாணங்களின் இணைப்புப் பிரதேசமாயும் விளங்குகிறது.

இந்தப் பூமியைப் பாதுகாப்பதற்கு தந்தை செல்வாவின் வலக்கரமாய் இருந்து பாடுபட்டவர் அமரர் என் ஆர். இராசவரோதயம் ஆவார். திருவாளர்கள் சிவபாலன், இராசவரோதயம், மாணிக்கராசா, நேமிநாதன், சம்பந்தன் ஆகியோர் 1947 ஆம் ஆண்டு தொடக்கம் நாடாளுமன்றத்தில் அடுத்தடுத்துக் திருகோணமலையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

பிரதேச ரீதியாகவும், பிளவுபட்டும், வேறுபட்டும் கிடந்த தமிழர் சமுதாயத்திற்கு தமிழ்த்தேசியத்தை ஊட்டியவர் தந்தை செல்வநாயகம். தந்தை ஸ்தாபித்த தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதலாவது கிழக்கு மாகாணப் பிரதிநிதி என்ற பெருமைக்குரியவர் அமரர் இராசவரோதயம். 1952-ம் ஆண்டு தொடக்கம் அன்னார் அமரத்துவம் அடையும் வரை தந்தையை நிழல் போல் பின்பற்றித் தமிழ் சமுதாயத்தின் உரிமைக்காகப் போராடினார்.

1956-இல் இனப்பிரச்னையைத் தொடர்ந்து பிரசித்தி பெற்ற திருமலை மகாநாடு "ஆகஸ்ட் போராட்டத்தை" பிரகடனப்படுத்தியது. இந்த மகாநாட்டிற்கு ஆயிரக்கணக்கான மக்கள் பிறமாவட்டங்களிலிருந்து கால்நடையாகவே திருமலை வந்தடைந்தார்கள். வந்தவர்களுக்கு இலவச உணவும், உறைவிடமும் தந்து உதவிய திருமலையின் தலைமகன் வரோதயரே என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திருமலை தீர்மானமே பண்டா-செல்வா ஒப்பந்தத்தை உருவாக்கியது

1958-ம் ஆண்டு வவனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாட்டிற்குத் தலைமை தாங்கிய பெருமையும் தமிழர் கட்சியொன்றின் தலைமைத்துவத்தையும் தாங்கிய முதலாவது கிழக்கு மாகாணத்தவர் என்ற புகழும் வரோதயருக்கே உரியது.

சாதி ஒழிப்பில் முன்னின்று உழைத்த இப்பெருமகனே தனது முகாமையிலிருந்த முத்துக்குமாரசாமி கோவிலை ஹரிசனங்களுக்குத் திறந்துவைத்து இந்துக்களிடையே நிலவிய சாதிமுறையைச் சாசடித்தார் பிரட்ரிக் கோட்டையுள் எழுந்தருளியிருக்கும் கோணேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்பிற்கு அன்னார் செய்தபணி மகத்தானது. சிறந்த உதைபந்தாட்ட வீரனை வரோதயரை மாலை நேரத்தில் மக்கெய்சர் மைதானத்தில் அல்லது வடக்குக்கடற்கரையிலோ காணலாம். அவர் எங்கே சென்றாலும் அங்கே மக்கள் சென்று தமது தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாயிருந்தது.

தமிழர்கள் மட்டுமல்ல, இஸ்லாமியர்கள், சிங்களர் அனைவரும் அவரை விரும்பினார்கள். தனது இனத்தின் உரிமைக்காகப் போராடினார். ஆனால் என்றுமே இனத்துவேஷியாக மாறியதில்லை.

ஊரெழு
க. முத்துக்குமாரசுவாமி.

## வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பல ரகமுள்ள 3500 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மீளளிப்புவைப்புப்பணமாக ரூ. 250/-ஐச் செலுத்திய பின்னர் ரூ 5/- ஐச்செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்திசெய்து,கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப்பத்திரம்" எனக்குறித்து பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும். வெற்றுச் சாக்குகளை அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 02-09-87.

பொதுமுகாமையாளர்,
புலோலி ப. நோ. கூ.சங்கம்.
[எ-2111]

## 90-வது நாள் நினைவஞ்சலி



செல்வன்
தம்பையா
திருஞானராஜா
(ஞானம்)

மலர்வு;- 17- 7- 66
உதிர்வு:- 30- 5- 87

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச் செல்வமே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயறும்;
பெற்றோர், ஆச்சி, சகோதரர், மச்சான்மார், மச்சாள்மார். உறவினர்கள், நண்பர்கள்.

உடையாவளவு,
கொற்றாவத்தை.
[சி-0642]

## 3-ம் மாத நினைவஞ்சலி




தி ரு. செல்லையாபிள்ளை
குமாரசிங்கம்

பிறப்பு:-
1938- 08- 22
இறப்பு:-
1987- 05- 27

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், பார்வையின் பசுமரமாய், சிரிப்பில் நிறைமதியாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்போடும் ஆதரவோடும் எம்மை வளர்த்து இடைநடுவில் எம்மை ஆறாத்துயரத்தில் விட்டகன்ற எங்கள் அன்புத் தெய்வமே!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.
6, பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம்.
(சி-0638)

## 90-வது நாள் நினைவஞ்சலி



இ. சுபேஸ்
(ஹாட்லிக்கல்லூரி மாணவன்)

அன்னைமடியில்:-
01- 12- 1969
ஆண்டவன்அடியில்;-
30- 05- 1987

நெஞ்சில் நிறைந்த அன்பு மகனே! படையினரின் கொலைவெறியால் பரிதாபமாய் உன் உடல் பிரிந்ததே! நீ பிரிந்து 90 நாட்கள் ஓடி மறைந்தாலும் என்றும் உன்வதனம் எம் முன்னே நிழலாடும்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு அம்மா,
தம்பிமார்கள்.
திக்கம்.
(சி-0560)

## கம்யூனிஸ்ட் கட்சிக்குழு நாளை யாழ். வருகிறது

[யாழ்ப்பாணம்]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு செயலாளர் திரு. எஸ். சுதசிங்கா, அரசியல் குழு உறுப்பினரும் 'உலக மாக்சிஸ்ட் றிவியூ' சஞ்சிகையின் இலங்கைப் பிரதிநிதியுமான திரு. ராஜா கொலூரே மத்திய கமிட்டி அங்கத்தவரும், 'சக்தி' பத்திரிகை ஆசிரியருமான திரு. சுகந்தன் கந்தசாமி ஆகியோர் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

இரு தினங்கள் இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவார்கள்.

29-ம் திகதி சனி பிற்பகல் யாழ். கட்சி அலுவலகத்தில் மாவட்ட கமிட்டிஅங்கத்தவர்கள், கிளைச்செயலாளர்கள் கூட்டத்தில் பங்குகொள்வர்.

ஞாயிறு முழு நாளும் கட்சி அங்கத்தவர்கள் பொதுக்கூட்டத்திலும் கலந்துரையாடலிலும்பங்குகொள்வர்.

## இப்படியும் நடக்கிறது

வீதியில் போய்க்கொண்டிருக்கிறீர்கள். ஓரிடத்தில், பத்து ரூபா நோட்டு நான்காக மடிக்கப்பட்ட நிலையில் கிடக்கிறது. என்ன செய்வீர்கள்?

"அதாவது நீங்கள் என்ன செய்வீர்கள்......?" என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. சரிவிடுங்கள். விஷயத்துக்கு வருவோம்.

யாழ். கடற்கரை வீதியில் ஒரு 'பேக்' அநாதரவாகக் கிடக்கிறது. ஒருவர், அதன் அருகே சென்று அக்கம் பக்கம் பார்த்துவிட்டு எடுக்கிறார். திறக்கிறார். அவர் உடலில் 'மின்சாரம்' பாய்கிறது காரணம் —

அந்த பேக்'குக்குள் இருந்தது பாட்டரி இல்லை. கத்தையாக ரூபா நோட்டுக்கள். அதாவது மொத்தம் ஒரு லட்சம் ரூபா!

என்ன செய்வார் அவர்: படிக்கிற உங்களுக்கே (மன்னிக்கவும் நமக்கே) வாயில் ஜலம் ஊறுகிறதென்றால் அவர் பாடு ......?

அந்தப் பணத்துக்கு உரியவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அப்பணத்தை அப்படியே கையளித்திருக்கிறார்!

அந்தப் பண்பாளர் பெயர் திரு. சொக்கலிங்கம். பிரதான வீதியில் வசிக்கின்றார்.

ஆயிரத்தில் ஒருவர் என்றால், சாட்சாத் இவர்தான்! சபாஷ் சொக்கலிங்கம்!

ஊடுருவி

## 5000 சிங்கள இளைஞர்களை பொலிஸார் தேடுகின்றனர்

(கொழும்பு)

தென் பகுதியில் அரச விரோத நடவடிச்கைகளில் ஈடுபடும் சுமார் 5000 சிங்கள இளைஞர்களை தேடி பொலிஸார் பெருமளவில் தேடுதல் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக பொலிஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தேடப்படும் இளைஞர்கள்பல அரச விரோத கொலைச் சம்பவங்களிலும், ஆயுதக்கடத்தல்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகிறார்களாம்.

இவ் இளைஞர்கள் இரவுவேளைகளில் சில மணி நேரங்கள் மாத்திரம் வீடுகளுக்கு வந்து செல்வதாகவும் மற்றைய நேரங்களில் அரச விரோதத்தில் ஈடுபடுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இடமாற்றம்
கொழும்பு ஸ்ருடியோ
ஸ்ரான்லி வீதி
20-08-87 முதல்
[வெலிங்டன் சந்திக்கு வடக்கே] 55, மணிக் கூட்டு வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.
ஏ-2086

அறிவித்தல்
பருத்தித்துறை லக்ஷ்மி பவான் மீண்டும் பழைய இடத்தில் [பஸ் நிலையம்] நாளை 27-ம் திகதி காலை 10-30 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படும்.
அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
உரிமையாளர்
[சி 0665]

வாடிக்கையாளர்களின்
நலன் கருதி
L. P. Gas, கருவாட்டுக்குகந்த அரைத்த உப்புத்தூள், சீமெந்து, மற்றும் அப்பளத்துக்கு உகந்த உழுந்து மா ஆகியவற்றை M. G. M. 208, முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள எமது கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
Head Office;
M.G.M. & Stores,
NO. 777, K. K. S ROAD, JAFFNA.
[சி 0654]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 27-8-87

# "இனப்படுகொலை தொடருமானால் ஆயுதம் ஏந்துவோம்!"

## 'ஈரோஸ்' வன்னி பொறுப்பாளர் கூறுகிறார்

(வவுனியா)

"சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்பும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை நடக்குமானால் ஈரோஸ் இயக்கம் எமது மக்களை காப்பாற்ற ஆயுதம் ஏந்தத்தயங்க மாட்டாது"

'ஈரோஸ்' இயக்கத்தின் வன்னிப் பிராந்திய பொறுப்பாளர் (ஐ. பி. ரி) வரதன் எமது நிருபருக்கு அளித்த பேட்டியின்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

வவுனியாவில் வைத்து அளிக்கப்பட்ட இப்பேட்டியின்போது வரதன் மேலும் கூறியதாவது: "ஈரோஸ் இயக்கத்தினைப் பொறுத்த வரையில் நடைபெறவிருக்கும் எந்த தேர்தலிலும் பங்கு கொள்ள மாட்டாது. ஆனாலும் எமது இயக்கத்தின் துணை அமைப்பான 'ஈழவர் முன்னணி' தேர்தலில் போட்டியிடும்

"இடைக்காலத் தீர்வில் எமக்கு நம்பிக்கை இல்லை ஆனால் வடக்கிலும், கிழக்கிலும் ஆயுதமின்றி எப்படி எமது பணி கடந்த காலங்களில் நடந்ததோ அதே மாதிரி எமது பணி தொடரும்.

"எமது தோழர்கள் போட்டிக் காகவோ அல்லது வேறு நோக்கங்களுக்காகவோ தாக்குதல்களை நடத்தவில்லை இயக்கத்தின் அரசியல் முடிவின் படியே இராணுவ தாக்குதல்களை நடத்தியுள்ளோம்.

"எம்மைப் பொறுத்தமட்டில் தற்போது இலங்கை இந்திய அரசு செய்துகொண்டுள்ள சமாதான உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையே கிடையாது.

### மக்களுக்கு நிம்மதி பாதுகாப்பு

"இந்திய அமைதிப்படை இராணுவம் இங்கு வந்துள்ளதினால் எமது மக்களுக்கு பாதுகாப்பு உண்டு அத்துடன் நிம்மதி ஏற்பட்டுள்ளது. எமது மக்களைப் பாதுகாக்க இந்திய அரசு உத்தரவாதம் அளித்துள்ளது இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு அமையவே நாம் எம்மிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்துள்ளோம். இந்திய அரசிடம் எமக்கு பூரண நம்பிக்கை உண்டு"

## உலக வங்கித் தூதுக் குழு

[கொழும்பு]

"இலங்கையில் 1983 ஜுலை கலவரத்துக்குப்பின் பாதிக்கப்பட்ட இடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்குமான அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு உலகவங்கியின் தூதுக்குழுவொன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இந்த அறிக்கை நிதியமைச்சு அதிகாரிகளின் உதவியுடன் தயாரிக்கப்படும்.

இத்தகவலை நிதியமைச்சர் ரொனி டிமெல் நேற்று தனது அமைச்சின் காரியாலயத்தில் நடத்திய பத்திரிகையாளர் மகநாட்டில் தெரிவித்தார்.

இம்மகாநாட்டிற்கு முன்னர் அமைச்சர் இலங்கைக்கு உதவியளிக்கும் நாடுகளின் இராஜதந்திரிகளையும் சந்தித்து உரையாடினார்.

## வயிற்றோட்டம்: மேலும் ஒரு குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளில் மேலும் ஒரு குழந்தை நேற்று மரணமானது.

நயினாதீவைச் சேர்ந்த சயந்தினி என்றகுழந்தையே மரணமானவராவார்.

கடந்த மூன்று நாட்களில் 39 குழந்தைகள் இந்நோய் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு)

## பிரிட்டனில்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருக்கும் 41பேர் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாகவும் நாடு கடத்தல் உத்தரவு வழங்கப்பட்ட 5 பேரும் பிரிட்டனிலிருந்து 10 நாட்களுக்குள் வெளியேற்றப் படுவர் என்றும் அவர்கள் எக்காரணம் கொண்டும் மேன் முறையீடுசெய்ய அனுமதிக்கப் படமாட்டார்கள்என்றும் உள்நுறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சுந்தரம்பிள்ளை சோமசுந்தரம்

புங்குடுதீவு 11-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் இல. 8, ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. சுந்தரம்பிள்ளை சோமசுந்தரம் (செல்வானந்தம், பங்காளர் கொழும்பு, சிவசண்முகராஜா அன் கோ, யாழ். மயூதரன் அன் கோ) காலமாகிவிட்டார். அன்னார் சிவயோகத்தின் அன்புக் கணவரும், காலம் சென்ற சுந்தரம்பிள்ளை சின்னம்மாவின் அருமை மகனும், வைரமுத்து கற்பகத்தின் அருமை மருமகனும் கேதீஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஸ்ரீதரன், பாஸ்கரன், தயாபரன், சுகந்தினி, சசீகரன் பிரதீபன் ஆகியோரின் அருமைத் தந்தையும், லெட்சுமணன், காலம்சென்ற கணபதிப்பிள்ளை நாகேஸ்வரியின் அருமைச் சகோதரனும் முத்துலிங்கம் (பிரான்ஸ்), கிஷ்ணலிங்கம் (ஜெர்மனி), நவரெத்தினலிங்கம் ஆகியோரின் அத்தானுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

(சி 0662) இரத்தினம், புங்குடுதீவு

### சாமுவேல் கந்தவனம் திரவியநாயகம்

சாவகச்சேரி பிரபல சட்டத்தரணியும், முன்னாள் நகரசபை தலைவரும், சமாதான நீதிபதியுமான திரு. எஸ். கே திரவியநாயகம் அவர்கள் கர்த்தருக்குள் மறுமைப்பிரவேசம் அடைந்துள்ளார் அன்னார் காலஞ்சென்ற பேள். செல்லம்மா அவர்களின் அன்புக்கணவரும், திருமதி எடிற் திரவியமலர் இரத்தினராசா (ஆசிரியை, மகளிர் மகா வித்தியாலயம், சாவகச்சேரி) அவர்களின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற ஏ. டீ. ஆர். இரத்தினராசா அவர்களின் மாமனாரும், விஜிற், ஏகன் (அமெரிக்கா), யூகன் இரத்தினராசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பிரேத சேம ஆராதனை அவரது இல்லத்தில் 29-8-87 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும்.

'திரவியவாசா' திருமதி எ. தி. இரத்தினராசா.
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(சி 0603)

### டாக்டர் கா. பரமநாதன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட நல்லூரைச் சேர்ந்த கா. பரமநாதன் (டாக்டர்) 25-8-87 இல் காலமானார். இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், நிர்மலா (டாக்டர் U K), திருமதி மாலதி ரவீந்திரநாதன், சியாமளா (மட்டக்களப்பு பல்கலைக் கழகம் விசாய பீடம்), சகுந்தலா (இந்தியா), சுசீலா ஆகியோரின் தகப்பனாரும், ரவீந்திரநாதனின் (O T.B) மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். நண்பர்கள் உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி பரமநாதன், 465/17, பருத்தித்துறைவீதி,
[சி 0658] நல்லூர்.

## "யாழ். ஆஸ்பத்திரி 20ம் வார்ட் ஞாபகச் சின்னமாகப் பாதுகாக்கப்படவேண்டும்"

### — சிங்கராயர்

(யாழ்ப்பாணம்)

"எம் இனத்தின் விடுதலைக்காக மக்கள் ஒன்று திரண்டு போராடிய காலத்தில் அவர்களால் செய்யப்பட்ட தியாகம் அவர்கள் பட்ட இன்னல்கள், சிந்திய இரத்தம் சந்ததி சந்ததியாக மக்கள் மனதில் நிலைத்திருக்க யாழ்.ஆஸ்பத்திரி முக்கியமானதொரு ஞாபகச் சின்னமாகும். இச்சின்னத்தை மறக்காமல் மக்கள் மனதில் இடம்பெற வைக்க வேண்டுமாயின் போராட்ட காலத்தில்

இராணுவத்தினரால் ஷெல் ஏவி பல உயிர்களைப் பலிகொண்டுஉடைக்கப்பட்ட இவ்வாஸ்பத்திரியின் 20ம் வார்ட்டைத் திருத்த வேலை செய்யாமல் உடைந்தபடியே காலாதிகாலமாக வைத்திருந்து பேணப்பட வேண்டும். இதற்கான வேண்டுதலை நான் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கினியனிடம் விடுத்துள்ளேன்"

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரிக்கு தன்உடல் நிலையை பரிசோதிக்க வந்த வண. பிதா சிங்கராயர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரி நோயாளர் நலன் புரிச் சங்கத்திற்கும் வருகை தந்த அவர் மேலும் கூறியதாவது;

போராட்ட காலத்தில் இந்த ஆஸ்பத்திரியை மூடும் கட்டம் வந்த போதும் அதனை எதிர்த்து மூடாது தடுத்து தொடர்ந்தும் எம் மக்களின் இயற்கை செயற்கைப் பிணிக் கஷ்டங்களைப் போக்க நோயினால் உயிருடன் போராடும் மக்களைக் காக்க திடசங்கற்பம் பூண்டு எத்தனையோ உயிர் பிரிய வேண்டிய கஷ்டங்களுக்கும் மத்தியிலும் தம்முயிரை மதிக்காது தொடர்ந்தும் சேவையாற்றிய வைத்தியர்களையும், தாதியர்களையும் ஏனைய ஊழியர்களையும் நான் பெரிதும் பாராட்டி நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டாக்டர்கள் அக்காலத்தில் வேற்று நாடுகளுக்குச் சென்று பெருந் தொகைப் பணத்தை சம்பாதித்திருக்கலாம் ஆனால் அவர்கள் அதை நினைக்கவுமில்லை செய்யவுமில்லை. மக்களுக்காகப் பூண்ட திடசங்கற்பமே அதற்குக் காரணமாகும்.

நோயாளர் நலன் புரிச்சங்கத்தன் அளப்பரிய சேவைகளையும் பாராட்டிப் பேசிய வண பிதா சிங்கராயர் அவர்களின் சேவை தொடர ஆசிகளும் வழங்கினார். [கு]

## மக்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

தியாகி சிவகுமாரன் நினைவு தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உரும்பராய் சந்தியில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு திலீபன் மேலும் கூறியதாவது:

ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் இணைந்திருந்த இந்தப் போராட்டத்தில் மக்கள் இணையவில்லை.

"இன்றைய வீரம் செறிந்த போராட்டத்தில் மக்கள் இணைந்திருந்தால் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டிருக்காது தொடர்ந்து எமது ஆயுதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும். மக்கள் எல்லோரும் ஓரணியில் நின்று போராடினால் இந்திய இராணுவமென்ன அமெரிக்க இராணுவத்தை எதிர்த்தும் போரிடலாம்"

(விபரம் நாளை வரும்)

## மிகிந்தலைக் காட்டில் — குகை ஒன்றிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மிகிந்தல காட்டில குகை ஒன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பெருமளவு ஆயுதங்களும், வெடி மருந்துகளும், இராணுவ உடைகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரகசிய தகவல் ஒன்றையடுத்து இப்பகுதியில் தேடுதல் நடத்தியபோதே இவ்ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாகப் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் தென் பகுதியில் காடுகளில் பலத்த தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (சி)

## திருமலையில் மட்டும் ஊரடங்கு

[கொழும்பு]

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றிரவு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை நீக்கப்பட்டு மீண்டும் இன்றிரவு ஏழு மணிக்கு அமுல் செய்யப்படுமென இலங்கை அரசு அறிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய இடங்களில் நேற்றிலிருந்து ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் ஆங்காங்கே சில இடங்களில் வன்செயல்கள் இடம்பெறுவதால் அங்கு தொடர்ந்து ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாகத் தெரிகிறது.

## ஆங்கில தகுதி தேர்வு 13ம் திகதி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலை. விஞ்ஞான, மருத்துவ பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆங்கில தகுதித்தேர்வு அடுத்த மாதம் பதின்மூன்றும் திகதி நடைபெறும்.

நேற்றைய ஈழநாடு பத்திரிகையில் 14ம் திகதி ஆங்கிலத் தகுதித்தேர்வு நடைபெறும் என வெளிவந்த செய்தி தவறாகும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.